செய்தி இதழாகப் பதிவு பெற்றது


# தந்தி

இல: 1047 | 1970 ஜூன் 5 வெள்ளிக்கிழமை | விலை சதம் 5

University of Sri Lanka RECEIVED 1970 7 8 Periodicals Division

## 'உங்கள் ஆதரவாளர் முயற்சியை தடுக்கவும்'

# மாஜிப் பிரதமருக்கு புதிய பிரதமர் பதில்



குரங்கிலிருந்து வந்தவன் மனிதன் என்பதற்கு ஒரு உதாரணம்- மனிதவெறி கொண்ட குரங்கு, மரம் ஏறும் சாக்கில், மங்கையின் சதை பிடித்த தொடையைக் கையாலும் தலையாலும் அழுத்திப் பிடித்து அனுபவித்து நிற்பதைப் பாருங்கள்- (ய)

**"ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை வன்முறைச் செயல்களால் கவிழ்க்க முயலாமல் இருக்கும்படி உங்கள் ஆதரவாளர்களைக் கேட்டுக் கொள்வீர்கள் என நம்புகிறேன்"**

பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயகா முன்னைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா எழுதியிருந்த கடிதத்திற்கு அனுப்பியிருக்கும் பதிலில் இவ்வாறு கூறியிருக்கிறார்- அவர் மேலும் கூறியுள்ளதாவது-

உங்களின் ஆதரவாளர்களைப் பாதிக்கும் சட்ட விரோத செயல்கள் பற்றிய தங்களின் 2-ந் திகதியிட்ட கடிதம் கிடைத்தது- சட்ட விரோத செயல்களை நீங்கள் ஆதரிக்கவில்லை என்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்- 1965 மார்ச் 20-ந் திகதி பொதுத் தேர்தலுக்குப் பின் இரண்டு வாரமாக நடைபெற்ற வன்முறைச் செயல்களுக்கெதிராக, பிரதம மந்திரியாயிருந்த நீங்கள் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்-

நாடாளுமன்றத்தில் 1965 ஏப்ரல் 5-ந் திகதி, 9-ந் திகதி ஆகிய தினங்களில் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட புகார்கள் பற்றி மறந்திருக்க மாட்டீர்கள்- அவை நாடாளுமன்றக் குறிப்புக்களில் உள்ளன- பொலீஸார் சமர்ப்பித்த அறிக்கைகளை எனக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்தும், உங்களது ஐந்து வருட ஆட்சியில் அது நடைபெறவில்லை- ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கு எதிராக பொலீஸ் உத்தியோகத்தர்கள் பாரபட்சமாக நடக்கவும் அனுமதித்தீர்கள்-

பொதுத்தேர்தல் முடிந்து ஒரு கிழமைக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது- பாதுகாப்பு கேட்ட உங்களின் முன்னுள் அமைச்சர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு உள்ளது- ஆரம்பத்திலேயே குழப்பம் செய்வோர் நீலம், சிவப்பு, பச்சை உடை அணிந்த எவராய் இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அறிவித்திருந்தேன்- பொலீஸ் அறிக்கைகளின்படி கைது செய்யப்பட்டவர் சிலர் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களாவர்-

உங்கள் கட்சிக்காக அபராது பிரசாரம் செய்தவரான வணு- தேவமொரட்டாவ அமரவன்ஸவும் இன்னும் சிலருடன் கைக்குண்டுகள் வைத்திருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்- பலாங்கொடையில் தமிழ்க் கடைகளில் சூறையாடப்பட்ட பொருட்கள் பிரபலமான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் இருந்ததைப் பொலீஸார் கண்டு பிடித்துள்ளனர்-

இன்றைய குழப்பத்துக்கு யார் காரணம் என்பதைத் தெரிவிக்கவே மேற்கண்ட ஒரு சில சம்பவங்களைக் குறிப்பிடுகிறேன்- மே மாதம் 29-ந் திகதி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலை நாட்டும்படி நான் வேண்டியதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்- ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட ஏற்கனவே நடவடிக்கைகள் எடுத்துள்ளேன் என்பதை உறுதியாகக் கூற விரும்புகிறேன்- மே மாதம் 29-ந் திகதி "சிலோன் டெய்லி நியூஸ்" பத்தி

(4ம் பக்கம் பார்க்க)

### மீனாட்சி



என்னுங்க, இனி எங் கடை பொடியள் வீதிகளில் நின்று வெற்றிக் கொடியேற்றி வெயில் காயத் தேவையில்லையாமே!

ஆமாங்க, பிள்ளைப் பெற்றவனுகல்லோ பிள்ளையளின் அருமை தெரியும்!

## பிரதமர் உத்தரவின் பேரில் இரவு, பகலாக பொலீஸ் உஷார்

பொலீசார் சற்று அசமந்தமாய் இருந்ததால், சமீபத்தில் கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் திடீரென ஏற்பட்டுத் தணிந்த பலாத்கார சம்பவங்கள், மீண்டும் முன்பைவிட மோசமான அளவில் நடைபெறக் கூடும் என உயர்தர பொலீஸ் அதிகாரிகள் கருதுகிறார்கள்.

எனவே நிலைமை சீரடைந்துவிட்டது என்பது நன்கு தெரியும்வரை இடைவிடாது விழிப்புடன் இருக்குமாறு சகல பொலீஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பொலீஸார் உறுதியுடன் நின்று சமாதானத்தைக் குழப்புபவர்களை, அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆயினும் கைதுசெய்து கொழும்பிலும், வெளியூர்களிலும் பலாத்காரத்தை முளையிலேயே கிள்ளி எறியுமாறு பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா பொலீஸ் மா அதிபர் திரு. அலெரிக் அபயகுணவர்த்தனவுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த உத்தரவை அடுத்து கொழும்பின் எல்லா வீதிகளிலும், வெளியூர்களிலும் இரவு பகலாகப் பொலீசார் ரோந்து சுற்றி வருகிறார்கள்.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக ஐ. ஜீ. பி அறிவித்திருக்கிறார்.

அதே சமயம் நாடெங்கிலும் பொய் வதந்திகளைப் பரப்பி மக்களை அச்சுறுத்திவரும் நபர்கள் குறித்தும் பிரதமர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இதற்கிடையில் கொள்ளை, பலாத்காரம் ஆகியன வெளியூர்களில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாய் பொலீஸாருக்கு அறிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் மீது பொலீசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். (ய)

## நினைத்ததை சாதிக்க ஸ்ரீமாவால் முடியும்

"இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைப் போலல்லாது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இருப்பதினால் அவர் நினைத்ததைச் சாதிக்க முடியும்-"

இவ்வாறு பிரபல இந்தியப் பத்திரிகையாளரும் ஜனசங் கட்சியை சேர்ந்த லோகசபை அங்கத்தவருமான டாக்டர் பாபுராவ் படேல் கருத்துத் தெரிவித்தார்-

ஒசாக்கா செல்லும் வழியில் கொழும்பில் தங்கிய டாக்டர் படேல் மேலும் கூறியதாவது-

"சுதந்திரத்தின் பின்னர் இந்தியாவின் அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு காங்கிரஸ் ஆவல் கொண்டுள்ளது- ஆனால் அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை இதுவரை, அதற்குக் கிடைக்கவில்லை-

"ஆனால் இன்று தனது நாட்டின் அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்கக் கூடிய பெரும்பான்மை ஆதரவு ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு உண்டு" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் முடிவை அடுத்து பல ருசிகர சம்பவங்கள்

# நிர்வாண கோலத்தில் வீதியில் நடந்த காளை!

### ஆசைநாயகியைக் கூட நண்பனிடம் ஒப்படைப்பு

கொழும்பில் ஜன நெருக்கடியான ஒரு தெருவில் நேற்று முன்தினம் வாலிபர் ஒருவர் முழு நிர்வாணமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அவரைப் பின் தொடர்ந்து ஒரு கூட்டமே வந்து கொண்டிருந்தது. கேலியும் கிண்டலும் ஒரே அமர்க்களமாக இருந்தது. இந்தக் காட்சியைக் கண்டவர்கள் திடுக்கிட்டார்கள். பின்னர் காரணம் தெரிந்ததும் புன்முறுவல் கொண்டார்கள். ஆமாம் — தேர்தல் பந்தயம் ஒன்றில் தோற்றவர் தமது பந்தயத்தின் பிரகாரம் வீதியில் நிர்வாணமாக நடந்து சென்ற காட்சியே அதுவாகும்.

"பொதுத் தேர்தலில் யு. என். பி.தான் வெல்லும். கூட்டணி தோல்வியே அடையும். அப்படிக் கூட்டணி வென்றுவிட்டால் நான் நடு வீதியில் நிர்வாணமாக நடந்து செல்வேன்" என்று இந்த வாலிபர் பந்தயம் பிடித்திருந்தாராம். தேர்தலில் கூட்டணிக் கட்சிகள் அமோக வெற்றி பெற்றதை அடுத்து அவர் தனது பந்தய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியதாயிற்று.

தேர்தல் முடிவுகளை அடுத்து பலர் தமது பந்தய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகின்றனர். எத்தனையோ பேர் தமது கார்களை மற்றவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

தேர்தலை மையமாக வைத்து கொழும்பில் ஒரு குதிரைப் பந்தய புக்கி பந்தயங்களை ஏற்றதாகவும், தேர்தல் முடிவு எதிர்பாராததாக அமைந்து விட்டதால் அவர் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. நியாயப்படி அந்த புக்கி தனது வாடிக்கைக்காரர்களுக்கு பந்தயப் பணத்தை வழங்க வேண்டுமானால் அவருக்கு 10 லட்சம் ரூபாவுக்கு மேல் தோல்வி ஏற்படுமாம்.

எத்தனையோ பேர் தங்கள் தலைகளை மொட்டையடித்துள்ளனர். தாடி, மீசைகளை வழித்தெறிந்தவர்களும் பலர் இருக்கிறார்கள். இதனால் பலர் தங்கள் மொட்டைத் தலைகளை மறைக்கத் தொப்பி அணியத் தொடங்கியுள்ளனர்.

பொரளை சந்தியில் வெறும் மேலுடன் அங்கப் பிரதட்சணம் செய்வதாக பந்தயம் பிடித்திருந்த ஒருவர் அவ்விதமே நேற்று தமது வாக்குறுதியை நிறைவேற்றினார்.

தேர்தல் பந்தயத்தில் தோற்ற சிலர் தங்கள் காதலியரைக்கூட மற்றவர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துள்ளனராம். களனியில் ஒருவர் தான் கடந்த ஐந்து வருடமாக தொடர்புவைத்திருந்த ஆசை நாயகியை தனது நண்பர் ஒருவரிடம் ஒப்படைத்தாராம். (ம)

### கிராமசேவகர் முறை திருத்தி அமைக்கப்படும்

கிராமசேவகர் சேவையைச் சீர்திருத்தி அமைக்க ஐக்கியமுன்னணி அரசாங்கம் முன்வந்துள்ளது.

நியமனம், சேவைபற்றிய பல மாற்றங்களைச் செய்ய உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எண்ணியுள்ளார்.

போட்டிப் பரீட்சை நடாத்தி கூடிய தராதர அடிப்படையிலேயே கிராமசேவகர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதும், சம்பளத்தைக் கூட்டி, கூடிய பொறுப்புகளும், வசதிகளும் அளிக்க வேண்டுமென்பதும் அமைச்சரின் திட்டத்தில் அடங்கியுள்ளன.

சுதந்திரத்துக்கு முன்பிருந்த ஏகாதிபத்திய ஆட்சி அடிப்படையிலேயே தற்போதைய கிராமசேவகர் முறை அமைந்திருப்பதாக அரசாங்க வட்டாரம் கருதுகிறது.

"கிராம விதானை" என்ற பெயர் கிராம சேவகர் என்று மாறியதுதான் ஒரு மாற்றமாக இருந்தது.

இச் சேவையை முற்றாக மாற்றி அமைக்க வேண்டுமென்பதே உள்நாட்டு அமைச்சரின் விருப்பமாகும். (ம- 15)

### மாணவ, மாணவியர்க்கு தமாஷாக்கள் வேண்டாம்

"பாடசாலை மாணவ, மாணவியர் தமாஷாக்களில் பங்குபற்றக் கூடாது. கல்விகற்பதில் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, கேளிக்கைகளில் பங்குபற்றி வரும் காலத்தை நாசமாக்கக் கூடாது."

புதிய கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதின் உத்தரவு இதுவாகும்.

முன்னைய அரசாங்க காலத்தில் அரசியல்வாதிகள் பங்குபற்றும் பொது வைபவங்கள், கேளிக்கைகள் முதலியவற்றுக்கு, மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, வீதியோரங்களில் கொடி பிடித்து தமாஷமிட பாவிக்கப்பட்டார்கள்.

இனிமேல் பாடசாலை வளவுக்கு வெளியே நடைபெறும் வைபவங்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லக் கூடாதென்று சகல மாவட்டக் கல்வி அதிபர்களுக்கும் கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வுத்தரவை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் கூறினார். (ம- 15)

### மக்கள் கமிட்டிகள் பற்றி பட்ஜெட்டில் தகவல்கள்

இம்மாதம் 14-ம் திகதி நாடாளுமன்றத்தில் நிகழ இருக்கும் ஐக்கிய முன்னணி அரசின் சிம்மாசனப் பிரசங்கத்தில், நடப்பு வருடத்தில் மக்கள் கமிட்டிகள் எவ்வாறு தொகுதிவாரியாக செயல்படும் என்பதுபற்றி தகவல்கள் வெளியிடப்படும்.

மக்கள் கமிட்டிபற்றி அமைச்சர்கள் கூடி ஆராய்ந்துள்ளதாகத் தெரிகிறது.

இக்கமிட்டிகள் உடன் நிறுவப்பட வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1970-ம் ஆண்டிற்கான புதிய வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு இம்மக்கள் கமிட்டிகள், நிர்வாகத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கருதுகின்றனர். (ம)

### 14ம் திகதி விடுமுறை

"மக்கள் வெற்றிதினம்" ஆக இம்மாதம் 14-ம் திகதியைக் கொண்டாட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மந்திரிசபை தீர்மானித்துள்ளது. அன்றுமுதல் ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு இருவேளை சோறு வழங்கப்படும்.

அன்றையதினம் அரசாங்க விடுமுறை தினமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் வெற்றி தினத்தன்று ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற உள்ளது. (ம)

### நீதிமன்ற அலுவல்கள் இனி சிங்களத்தில் நடக்கும்

நீதிமன்ற அலுவல்கள் யாவும் அரசாங்க மொழியான சிங்களத்தில் நடைபெறுவதற்கான செயல்முறைத் திட்டம் ஒன்றை நீதி அமைச்சர் திரு. ஜே. எம். ஜயமானே விரைவில் அமுல் நடத்துவார்.

தேர்தல் காலத்தில் ஐக்கிய முன்னணியினர் தெரிவித்த வாக்குறுதியை ஒட்டியே இது நடைமுறைப்படுத்தப்படும்.

ஆரம்பக் கட்டத்தில், கீழ்க் கோடுகளிலேயே சிங்களத்தில் கருமம் ஆற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதன் பிறகே உயர் நீதிமன்றங்களில் இது அமுல் நடத்தப்படும்.

சிங்கள மொழியில் கருமம் ஆற்றுவதற்கு எதிராக உள்ள கஷ்டங்களை ஆராய்ந்து, அவற்றை அகற்ற வேண்டிய நடவடிக்கைகள் முதலில் பரிசீலிக்கப்படும் என்று நீதி அமைச்சர் தெரிவித்தார். (ம)

### மிகவும் வேண்டியது

புதிய கல்வி அமைச்சரின் முதலாவது உத்தரவை இந்நாட்டிலுள்ள பெற்றோரும் மாணவர்களும் மனப்பூர்வமாக வரவேற்பர் என்பது திண்ணம். இதுகால வரை, யாராவது பெரியவர் இங்கு வரும்போது பள்ளி மாணவர்கள் வீதியின் இருமருங்கிலும் அகோர வெயிலிலும் அடைமழையிலும் நின்று வெற்றிக் கொடிகள் ஏந்தியும், வாய் குளறி வாழ்த்தியும் வரவேற்பளிப்பது வழக்கம். இந்த மானங்கெட்ட வழக்கத்திற்குப் புதிய கல்வி அமைச்சர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். இனிப் பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளிக்கூட வைபவங்களில் மட்டும் பங்குபற்றுவதல்லாமல் பொது வைபவ வீதி வரவேற்புகளில் பங்குபற்ற மாட்டார்கள். இந்த உத்தரவை மீறிக் கருமமாற்றும் தலைமையாசிரியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. படிக்க வேண்டிய நேரத்தில் வெயிற்காயும் தெருக்கூத்து எதற்கு?

தந்தி

### பௌத்த பிக்குனி உயிர்த் தியாகம்

சைகோன், ஜூன் 4

நீடித்து வரும் யுத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக 24 வயதுடைய பௌத்த பிக்குனி ஒருவர் தீமூட்டி உயிர்த் தியாகம் செய்தார். (ர)

### அந்நிய உதவிகளினால் சுதந்திரம் பாதித்ததா?

வெளிநாட்டு நிதியுதவி ஸ்தாபனங்கள், ஐக்கியநாடுகள் சபையின் நிதியுதவி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கடன் உதவியுடன் ஆரம்பிக்கப்படும் ஆக்க வேலைத்திட்டங்களால் நாட்டின் தனித்துவமும் சுதந்திரமும் பாதிக்கப்படுகின்றனவா என்பது பற்றி ஐக்கிய முன்னணி அரசு ஆராயவுள்ளது.

தேசிய அரசாங்கம் வெளிநாட்டு நிதியுதவி ஸ்தாபனங்களின் உதவியுடன் ஆரம்பிக்கத் திட்டமிட்ட 3 பாரிய திட்டங்கள் சம்பந்தமாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்ட 3 விசாரணைக் குழுக்களும் இதனைக் கண்டறிவதில் கவனம் செலுத்தும்.

பிரஸ்தாப விசாரணைக் குழுக்கள் மூன்றினதும் தலைவரான தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் இத் தகவலை தெரிவித்தார்.

காணி, நீர்ப்பாசன, மின்சக்தி, அமைச்சர் நியமித்த இந்த மூன்று விசாரணைக் குழுக்களும் தமது அறிக்கைகளை இந்த வார முடிவுக்குள்ளேயே சமர்ப்பித்துவிடும் என்றும், இவற்றின் முதலாவது கூட்டம் இன்று நடைபெறும் என்றும் அமைச்சர் குமாரசூரியர் மேலும் தெரிவித்தார். (ம)

தந்தி
சிறு விளம்பரங்கள்

வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொரலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பியின் உடற்பசிக்கு "தீனி" தேடித்தந்த அக்கா!

# வேலைக்காரி கற்பை சூறையாட முயன்றான்

### தண்டனையை எதிர்பார்த்து நீதிமன்றத்தில் நின்று தவம்

கள்ளங் கபடம் அறியாத கிராமத்து அழகி அவள். வயிற்றுப் பிழைப்புக்காக கொழும்பில் ஒரு பணக்கார வீட்டுக்கு வேலைக்காரியாக வந்தாள். அங்கே வீட்டு வேலைகளுடன் மூழ்கிக் கிடந்தவளை ஒரு சோடிக் காமக் கண்கள் எந்நேரமும் பின் தொடர்ந்தன. தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்ள அந்த அபலை பட்டபாடு அப்பப்பா, சொல்லி முடியாது!

அவள் பெயர் சுகதா. கட்டுக் குலையாத தேகம். பட்டுத் தளிர் மேனி, மொத்தத்தில் அவள் வண்டுகள் தொடாத ஒரு நறு மலர். மல்லிகா என்னும் ஒரு பெண்ணின் வீட்டுக்கு வேலைக்காரியாக அவள் வந்தாள்.

வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்து அதற்கான கூலியைப் பெறுவோம் என்று சுகதா எண்ணினாள். ஆனால் எஜமானியின் திட்டமோ வேறு விதமாக இருந்தது. மதமதப்பான உடலுடன் வலிய வந்து கொண்டிருந்த கட்டிளங்காளையான தனது தம்பி ரோஹனவின் உடல் பசிக்கு சுகதாவைத் தாரை வார்த்துக் கொடுக்க அவள் எண்ணினாள். ஆகவே வீட்டில் ரோஹனவும் சுகதாவும் தனித்திருக்கக்கூடிய சூழ்நிலையை தினசரி உருவாக்கிக் கொண்டாள்.

வீட்டு எஜமான் வெளியூரில் ஒரு தோட்டத்தில் பெரிய ஆபீசராக இருந்தார். கிழமைக்கு ஒரு தரம் வீட்டுக்கு வருவது அபூர்வம். எனவே எஜமானி மல்லிகாவுக்கு விரகதாபம் ஏற்பட்டது. தனது காமப் பசியைத் தீர்க்க தனது தம்பியின் நண்பனை சேனக்க என்பவனை தன்னுடன் சேர்த்துக் கொண்டாள். இந்த விஷயம் வெளியே தெரிந்துவிடாமல் இருப்பதற்காகவே தனது தம்பிக்கு வேலைக்காரி சுகதாவின் கற்பை தையளிக்கத் துணிந்தாள்.

வீட்டு வேலையில் மூழ்கிக் கிடக்கும் சுகதாவை ரோஹனவின் காமக் கண்கள் துரத்தும். அவள் ஓடி ஒளிந்துகொள்வாள். தேநீர் கொண்டுவந்து தரும்போது அவளைக் கட்டி அணைக்க முயல்வான். அவளோ திமிறிக்கொண்டு ஓடி விடுவாள்.

தனது காதலனுடன் இன்பம் அனுபவிக்க எஜமானி சென்றுவிடுவாள். வீட்டிலே வேலைக்காரிக்கு தம்பியைக் காவல் வைத்துவிட்டு, பஞ்சவர்ணக் கிளிக்கு கடுவன் பூனையைக் காவல் வைத்தால் எப்படி இருக்கும்? ஆனால் சுகதாவின் மனத் தைரியம் அவள் கற்பைக் காத்து வந்தது.

எஜமானி, தம்பி, வேலைக்காரி மூவரும் படத்துக்குப் போவார்கள். ஒரு பக்கத்தில் அக்காவையும், மறு பக்கத்தில் வேலைக்காரியையும் இருத்திவிட்டு நடுவிலே தான் உட்கார்ந்துவிடுவான் ரோஹன. படம் ஓடிக்கொண்டே இருக்கும். இங்கே வேலைக்காரியின் தளதள என்ற உடலில் அவன் கைச் சேட்டைகள் விடத் தொல்லைகளை எல்லாம் பல்லைக் கடித்தபடியே பொறுத்துக்கொள்வாள் சுகதா.

ஒரு நாள் தங்கள் உறவினர் வீட்டுக்குச் செல்வதாகக் கூறி வேலைக்காரியை அழைத்துச் சென்றனர் அக்காவும் தம்பியும். அங்கே சேனக்க என்னும் ஒரு இளைஞனுடன் எஜமானி ஒரு அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டதை அவள் கண்டாள். வெளியே ரோஹனவும், சுகதாவும் தனியே விடப்பட்டனர். அப்போது சுகதாவுக்கு பெரும் பயம் ஏற்பட்டுவிட்டது. ரோஹன ஆசையுடன் சுகதாவை நெருங்கினான். ஆனால் சுகதாவின் நல்ல காலம் அருகில் ஒரு அறை திறந்து கிடந்தது. அதற்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். ரோஹன வெளியே காமப் பசியுடன் இருந்தவாறே கதவைத் திறந்துவிடும்படி மன்றாடினான். ஆனால் சுகதாவின் மனம் இரங்கவில்லை.

மற்றொருநாள் மூவரும் வேறு ஒரு நண்பரின் வீட்டுக்குச் சென்றார்கள். வழியில் மல்லிகா இறங்கிவிட்டாள். கார் மீண்டும் புறப்பட்டது. சுகதாவும், ரோஹனவும் மாத்திரமே அப்போது காருக்குள் இருந்தனர். ரோஹனவின் காமத்தீ ஜுவாலை விட்டு எரிந்தது. சுகதாவைக் கட்டி அணைத்து முத்தம் கொடுக்க முயன்றான். ஆனால் நடக்கவில்லை.

சிறிது தூரம் சென்றதும் கார் நின்றது. சற்றுத் தொலைவில் வேறு ஒரு கார் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இந்தக் காரில் இருந்து இறங்கி மற்றக் காரில் ஏறும்படி சுகதாவிடம் ரோஹன கூறினான். காரணம் கேட்டாள் காரிகை. "இந்தக் கார் பழுது பட்டுவிட்டது. ஆதையால் மற்றக் காரில் போவோம் வா!" என்றான் காளை.

அவளும் அதை நம்பி மற்ற காரில் ஏறினாள். கார் மறைந்தது. ஒரு தன்னந் தனியான இடத்தில் இருந்த பழங்காலத்திய வீடொன்றின் முன் கார் நின்றது. வீட்டுக் கதவை ஒரு பெண் திறந்துவிட்டாள். இருவரும் உள்ளே சென்றனர். கதவு பூட்டப்பட்டது. அப்போதுதான் இப்படியான ஆபத்தான இடத்தில்தான் சிக்கிவிட்டோம் என்பதை சுகாதா உணர்ந்தாள்.

வெள்ளம் தலைக்கு மேல் சென்றுவிட்டது. இனி கற்பைக் காப்பாற்றிக்கொள்ள முயல வேண்டும் எனக் கருதிய சுகதா, ரோஹனவின் கால்களில் வீழ்ந்து தனது கற்பைச் சூறையாட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டாள்.

ஆனால் ரோஹனவோ எந்தவித மன்றாட்டத்துக்கும் மனமிரங்கக் கூடிய நிலையில் இல்லை. அவனுக்கு காமம் தலைக்கேறியிருந்தது.

"சுகதா, நான் உன்னை துன்புறுத்த மாட்டேன். நீயாக விரும்பி என்னுடன் உடலுறவு கொள்ள வா! உன்னை நான் மலர் போலப் பாவித்து நடப்பேன். எனது ஆசை நாயகியாக இரு. சாகும்வரை வைத்துப் பாதுகாப்பேன்" என்று ரோஹன கூறினான்.

ஆனால் கிராமப்புறத்தில் பிறந்து வளர்ந்த அந்தச் சிட்டு முறையற்ற வாழ்வை விரும்பவில்லை. மறுத்தாள். கோபம் தலைக்கேறிய ரோஹன அவளைக் கட்டி அணைத்து அருகிலிருந்த கட்டிலின் மீது வீழ்த்தி பலவந்தமாக உடலுறவு கொள்ள முயன்றான். சுகதாவோ சற்றும் இடங் கொடுக்கவில்லை.

"திமிறியபடியே கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடினாள். பேய் இருளிலும் மனந் தளராது ஓடினாள். அவளது நல்ல காலம் வழியில் ஒரு வீடு தென்பட்டது. அந்த வீட்டுக்குள் புகுந்து அடைக்கலம் கோரினாள். அந்த வீட்டுக்காரர் நல்லவர். இந்த அபலையின் கதையைக் கேட்டதும் உடனே பொலீஸாருக்கு தகவல் கொடுத்தார்.

ரோஹன அன்றிரவே கைதுசெய்யப்பட்டான். மற்றொரு வீட்டில் தனது கள்ளக் காதலனுடன் இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்த மல்லிகாவும் பிடிபட்டாள். இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

சுகதாவின் உடலைப் பரிசோதனை நடத்திய டாக்டர் அவளின் உறுப்புக்களில் சிராய்ப்புகள் ஏற்பட்டுள்ளன என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். இருப்பினும் அவளது கற்பு பறிபோகவில்லை என்பதை அவர் தெளிவாக்கினார்.

இதற்கிடையில் வீட்டு எஜமானி மல்லிகாவின் கள்ளக் காதல் தொடர்பு வெளிப்பட்டதையடுத்து அவளை உதறித் தள்ளிவிட்டார் அவளது கணவர். ஆனால் ரோஹன நீதிமன்றத்தில் தண்டனையை எதிர்பார்த்து நிற்கிறான்.

பாழுங்கிணற்றில் விழ இருந்து தெய்வாதீனமாகத் தப்பியுள்ள அந்த "கிராமத்துச் சிட்டு" மீண்டும் தனது பெற்றோரின் அரவணைப்பில் ஆறுதல் பெறுகிறாள். "இனி இந்த ஜென்மத்தில் நான் எந்த வீட்டுக்கும் வேலைக்காரியாகச் செல்ல மாட்டேன்" என்று கூறுகிறாள் அழகு சுகாதா! (ம)

## புறா மூலம் செய்தி அனுப்பும் முறை இன்னும் இருக்கிறது

தகவல் தொடர்புக்கு நவீன முறைகள் தோன்றியிருப்பினும், புறாக்கள்மூலம் செய்திகளை அனுப்பும்முறை இன்னமும் ஒரிசாவில் கையாளப்படுகிறது. இவ்விதத் தகவல் தொடர்புமுறை ஒரிசா பொலீஸாருக்கு உபயோகமாக உள்ளது.

மாநிலப் பொலீஸார் திட்டமிட்ட ஏற்பாட்டின்கீழ் புறாக்கள் மூலம் அஞ்சல் விநியோகத்தை நடத்திவருகின்றனர். வெள்ளம் ஏற்படும்போது கிராமப்புறங்கள், தலைநகரிலிருந்து துண்டிக்கப்படும்போது மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் புறாக்களின் அஞ்சல் விநியோகம் பயனுள்ளதாக இருக்கிறது.

பொலீஸ் சுப்ரின்டெண்ட் இயக்கும் புறாக்களின் அஞ்சல் விநியோகத்தில் 35 புறாக்கூட்டங்கள் உள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் ஆண்டொன்றில் 1000க்கும் மேற்பட்ட வளர்ந்த புறாக்கள் இவ் வேலைக்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் தொலைதூர, அடையமுடியாத பகுதிகளுக்கு ஆண்டொன்றுக்கு 12,000க்கும் மேற்பட்ட செய்திகள் புறாக்கள்மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

இந்திய இராணுவம், இதர மாநிலங்களின் பொலீஸ் படைகள் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் ஒரிசாவுக்கு வந்து புறா அஞ்சல்முறையில் தனிப்பயிற்சி பெற்றுச் செல்கின்றனர். (ம)

## கல்கிசை கடற்கரைக்கு புது மெருகூட்டப்படும்

உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதற்காக கல்கிசை கடற்கரைப் பகுதி புதுமெருகூட்டப்படும். கல்கிசை – தெகிவளை மாநகர சபை மேயர் மேஜர் எல். வி. குணரத்ன இதற்கான திட்டத்தைத் தயாரித்துள்ளார்.

இத் திட்டம் உல்லாசப் பயணத் துறை அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லையிடம் சமர்ப்பிக்கப்பட்டு. இதை அமுல் நடத்த அவரின் ஒத்துழைப்பு கோரப்பட இருக்கிறது.

பூஞ்சோலைகள், நீச்சல் குளம், விளையாட்டு மைதானங்கள் அமைத்தும், கடற்கரைப் பிரதேசத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்பதும் மேஜர் குணரத்னவின் திட்டத்தில் அடங்கியுள்ளது.

தனியார் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு வருடாந்த வாடகை அடிப்படையில் கல்கிசைக் கடற்கரைப் பகுதி குத்தகைக்குக் கொடுக்கப்படும். இப் பிரதேசத்தை சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருக்க வேண்டியது இந்த வர்த்தக ஸ்தாபனங்களின் பொறுப்பாக இருக்கும்.

தெகிவளை – கல்கிசை மாநகர சபையால் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலேயே உல்லாசப் பயணத்துறை அமைச்சின் உதவியை நாடி உள்ளது.

இத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு ஏற்படும் செலவு விபரங்கள் ஆராயப்பட்ட பின், அமைச்சரிடம் பூரண விபரங்களும் சமர்ப்பிக்கப்படும். (ம–15)

## தேசிய உயர் கல்வி சபை ஒழித்துக்கட்டப்படும்

தேசிய உயர் கல்விச் சபையை ஒழித்து விடுவதற்கான மசோதாவை கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இப்போது தயாரித்து வருகிறார்.

தேசிய உயர் கல்விச் சபையால் இந்த நாட்டின் உயர் கல்விக்கு எந்தவித பயனும் இல்லை என்ற கருத்து ஐக்கிய முன்னணி அரசுக்கு உள்ளதாலேயே இந்தச் சபையை ஒழித்து விடுவதற்கு கல்வி அமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

உயர் கல்விச் சபைக்குப் பதிலாக, நாட்டில் உள்ள உயர் கல்விக்கூடங்களான பல்கலைக் கழகங்களை சுயேச்சையாக இயங்கும் அமைப்புகளாக் கூட்டுத் தாபன அந்தஸ்தில் உயர்த்துவதற்கு புதிய மசோதா வகை செய்யும் என நம்பப்படுகிறது.

கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூதின் இந்தத் திட்டத்தைப் பல்கலைக் கழக மாணவர்களும் கல்விமான்களும் வரவேற்பதாகவும் அறியப்படுகிறது. (ம)

முடிவு 9-35...... ... ............

## நக்சல்பாரிகள் அட்டகாசம்

கல்கத்தா, ஜூன். 4

மேற்கு வங்கத்தில் ஜல்பைகுரி என்ஜினீயரிங் கல்லூரி முதல்வரை, நக்சல்பாரி மாணவர்கள், திங்கட்கிழமையன்று, கடுமையாகத் தாக்கினர். அவரைக் கொண்டு கல்லூரிக் கட்டிடத்தின்மீது செங்கொடி ஏற்றியபிறகே, விடுவித்தனர். (பு)

## நிர்வாண அழகியர் கைது

சென்னை, ஜூன். 4

மவுண்ட்ரோடு ஹோட்டல் ஒன்றில் பெண்கள் அரை நிர்வாணமாகவோ அல்லது முழு நிர்வாணமாகவோ காபரே நடனமாடுவதாகத் தகவல் கிடைத்தன்பேரில் திருவல்லிக்கேணி பொலீஸார் திங்களன்று இரவு திடீர் சோதனையிட்டு ஹாதியாவையும், பம்பாயையும் சேர்ந்த இரண்டு பெண்களைக் கைதுசெய்து இ. பி. கோ. 294–வது பிரிவின்கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளாந்தச் செலவுக்கு 10 கோடி ரூபா தேவை

# வங்குரோத்து நிலையில் நாடு இன்று இருக்கிறது!

### நிதி அமைச்சர் வெளியிடும் திடுக்கிடும் தகவல் இது

நாடு வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாளாந்தச் செலவுக்குக் கூட 10 கோடி ரூபா தேவைப்படுகிறது" என புதிய அரசாங்கத்தின் நிதி மந்திரி டாக்டர் என்- எம்- பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கொட்டாறு வீதி வாசஸ்தலத்தில் வைத்து நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் நாட்டின் நிதி நிலை பற்றியும், நாட்டை எதிர்நோக்கி உள்ள பொருளாதார நெருக்கடி பற்றியும் டாக்டர் பெரேரா விளக்கினர்.

"தேசிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பிலிருந்த காலத்தில் நாட்டின் உண்மையான பொருளாதார நிலையை பொதுமக்களுக்கு தெரிவிக்கவில்லை. அவர்கள் மத்திய வங்கியின் நாணயச் சபையின் எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாமல் நடந்து கொண்டதாலேயே இன்றைய நெருக்கடி நிலை உருவாகியுள்ளது" என நிதி அமைச்சர் அக்கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

நிதியமைச்சர் பத்திரிகையாளரிடம் மேலும் விளக்கியதாவது:—

"இன்று திறைசேரியின் நாளாந்த நிதி விவகாரங்களைச் சமாளிக்க 10 கோடி ரூபாவை வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் தேட வேண்டிய பெரும் பொறுப்பு என் தோளில் சுமத்தப்பட்டுள்ளது.

"தேசிய அரசாங்கத்தின் 1969-70 வரவு செலவுத் திட்டத்தின்படி செலவு 377 கோடியே 50 லட்சமாகவும், வரவு 270 கோடியே 50 இலட்சமாகவும் துண்டு விழுந்த தொகை 107 கோடி ரூபாவாகவும் இருந்தன. தேசிய அரசாங்கத்தினர் மத்திய வங்கியின் நாணயச் சபையின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் வர்த்தக வங்கிகளிடமும், வங்கிகளில்லாத நிதி ஸ்தாபனங்களிடமும் உயர்ந்த வட்டியுடன் நிதி பெற்று துண்டு விழுந்த இத் தொகையைச் சமாளிக்க முயன்றனர்.

"இதனால் நாட்டில் பணவீக்கம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதுடன் அந்நியச்செலாவணி நெருக்கடியும் தோன்றியுள்ளது" என்றார்.

### ரூபா 6500 திருட்டு

[illegible]ந்தப்பொலையிலுள்ள ரவிட்ட என்ற கிராமத்தில் 6500 ரூபா ரொக்கத்தையும், ரூ 650 பெறுமதியான பொருட்களையும் திருடர்கள் கோஷ்டி ஒன்று களவாடிச் சென்று விட்டதாய் பி- எம்- குணசேகரா என்பவர் பொலீசுக்கு புகார் தெரிவித்திருக்கிறார்.

(ய)

### பிரதமர் மட்டுநகர் விஜயம்

பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயகா, பல மந்திரிகள் சகிதம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் போது அவருக்கு கோலாகல வரவேற்பு அளிக்கப்படும்-

மட்டக்களப்பு இரண்டாவது எம்- பி- திரு- ராஜன் செல்வநாயகத்தின் அழைப்பின் பேரில் திருமதி பண்டாரநாயகா தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயமாக மட்டக்களப்புக்கு மேற்[illegible]றார்-

(ய)

### மாஜிப் பிர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரிகையில் திரு- ஜே- ஆர்- ஜயவர்தன எழுதியுள்ளது போல், ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை வன்முறைச் செயல்களால் கவிழ்க்க முயலாமல் இருக்கும்படி உங்கள் ஆதரவாளர்களைக் கேட்டுக் கொள்வீர்கள் என நம்புகிறேன்-

### பருத்தித்துறையில் இன்று ஆலயப் பிரவேச இயக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

பருத்தித்துறை கோட்டடிப் பிள்ளையார் கோவிலில் அப்பகுதியில் உள்ள சிறுபான்மைத் தமிழர்கள் இன்று ஆலயப் பிரவேசம் செய்யத் திட்டமிட்டுள்ளனர்-

பருத்தித்துறையில் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட திரு- நடராசா தலைமையில் ஆலயப் பிரவேசம் நடைபெற இருப்பதாக அறியப்படுகிறது-

பருத்தித்துறையின் பல பாகங்களிலும் கடந்த இரு நாட்களாக தேநீர்க்கடைப் பிரவேசம் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது-

தக்க பொலீஸ் பாதுகாப்புடன் பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட தேநீர்க் கடைகளில் சிறுபான்மைத் தமிழ் சமூகத்தினர் திடீர் தேநீர்க் கடைப் பிரவேசம் செய்தனர்- இதில் சுமார் இரு நூறு இளைஞர்கள் வரை கலந்து கொண்டனர்-

இந்தத் திடீர் தேநீர்க் கடைப் பிரவேசம், பருத்தித்துறை நகர சபை தீர்மானத்தின்படியே நடைபெற்றது- பருத்தித்துறை நகர சபையின் 4-ம் வட்டார உறுப்பினர் திரு எஸ்- எஸ்- விவேகானந்தர் இந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கினர்- ஒவ்வொரு தேநீர்க் கடைக்கும் இந்த இயக்கத்தினர் சென்றபோது கடை உரிமையாளர்கள் எதுவித மறுப்புமின்றி தேநீர் வழங்கினர்-

(ம)

### கள்ளக் குடியேற்றத்துக்கு உதவிய இந்தியருக்கு சிறை

சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்தவர்களை பிரிட்டனுக்குள் கள்ளத்தனமாகக் குடியேற்றுவதற்குச் சதி செய்ததாக லண்டன் விமான நிலையத்தில் கிளினராக வேலை பார்க்கும் ஹர்பக்ஸ் சிங் என்னும் இந்தியருக்கு 3 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இச் சதியில் ஈடுபட்ட அம்ரிக் சிங் என்னும் 21 வயது விவசாய ஊழியருக்கு ஒரு நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பிரிட்டனுக்குள் கள்ளத் தனமாக குடியேற்றப்படும் ஒவ்வொரு நபரின் மூலமும், இக் குடியேற்றத்திற்கு உதவுபவர்கள் சுமார் 600 பவுன் லாபம் அடைகிறார்கள் என்று கூறப்படுகிறது.

(ம)

### இ. போ. ச. விஸ்தரிப்பு

"இ- போ- ச-வில் முன்னைய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழல்களைக் களைந்து அதை சீர்திருத்தி, நிர்வாகத் திறமையை அபிவிருத்தி செய்வதே என் வேலை" இ- போ- ச- தலைவர் திரு- அனில் முனசிங்க இவ்வாறு தெரிவித்தார்-

(ய)

### கசிப்புக்கு அபராதம்

அநுராதபுரம், ஜூன், 4

28 போத்தல் கசிப்பு வைத்து இருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் அநுராதபுரம் கூட்டு நீதிபதி, அலடின் மெண்டிஸ் என்பவருக்கு ரூ. 350 அபராதம் விதித்தார்-

(ய)

### 9ம் திகதி விவாதம்

மட்டக்களப்பு மேயர் திரு- ஜே- எல்- திசவீரசிங்கத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை இம்மாதம் 9-ந் திகதி விவாதிக்கப்படும்- இதற்கான அறிவித்தலை மாநகர சபையின் கமிஷனர் திரு- ஜே- சிதம்பிநாயகம் மாநகர சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பி வைத்துள்ளார்-

(ம)

### சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஜூன் 5

நேற்று முன்தினம் மாலை கொழும்பு தேசிய லொத்தர் சபைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 301-வது சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதல் பரிசு

**09 F 0173**

ரூபா 79,750

இரண்டாவது பரிசு

**02 J 0334**

ரூபா 31,900

மூன்றாவது பரிசு

**25 B 0293**

ரூபா 7,975

தலா ரூபா 398/75 ஆறுதல் பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| **A** | |
| 15 A 0907 | 20 A 0751 |
| 28 A 0149 | 05 A 0577 |
| 26 A 0191 | |
| **B** | |
| 24 B 0378 | 13 B 0090 |
| 20 B 0828 | |
| **C** | |
| 33 C 0067 | 01 C 0163 |
| 15 C 0052 | 13 C 0824 |
| 03 C 0139 | |
| **D** | |
| 23 D 0007 | 27 D 0890 |
| 24 D 0730 | 25 D 0564 |
| 14 D 0376 | |
| **E** | |
| 18 E 0831 | |
| **F** | |
| 28 F 0730 | 16 F 0236 |
| 10 F 0554 | |
| **G** | |
| 03 G 0702 | 19 G 0757 |
| 04 G 0062 | 06 G 0421 |
| 12 G 0891 | 09 G 0141 |
| **H** | |
| 02 H 0437 | 03 H 0073 |
| 25 H 0913 | 29 H 0631 |
| 35 H 0551 | 21 H 0278 |
| 11 H 0949 | 14 H 0722 |
| **J** | |
| 15 J 0392 | 18 J 0537 |
| 28 J 0011 | 31 J 0528 |
| **K** | |
| 31 K 0470 | 14 K 0797 |
| 07 K 0426 | |
| **L** | |
| 11 L 0578 | 29 L 0736 |
| 02 L 0279 | 17 L 0912 |
| **M** | |
| 39 M 0615 | |
| **N** | |
| 32 N 0383 | 24 N 0399 |
| 09 N 0538 | 01 N 0887 |
| 09 N 0060 | 11 N 0091 |
| 25 N 0489 | |
| **O** | |
| 20 O 0776 | 21 O 0306 |
| 37 O 0123 | |
| **P** | |
| 04 P 0974 | 10 P 0456 |
| 19 P 0301 | 31 P 0713 |
| 16 P 0984 | 03 P 0076 |
| **Q** | |
| 35 Q 0717 | 18 Q 0207 |
| 12 Q 0966 | 03 Q 0980 |
| 35 Q 0976 | 35 Q 0016 |
| **R** | |
| 19 R 0804 | 35 R 0286 |
| 38 R 0940 | |
| **S** | |
| 10 S 0514 | 06 S 0642 |
| 22 S 0465 | |
| **T** | |
| 36 T 0130 | 07 T 0530 |
| **U** | |
| 12 U 0729 | 20 U 0415 |
| 08 U 0994 | 02 U 0387 |
| 17 U 0298 | |
| **V** | |
| 37 V 0953 | 16 V 0369 |
| 02 V 0719 | |
| **W** | |
| 11 W 0915 | 14 W 0107 |
| 37 W 0604 | 26 W 0174 |
| **X** | |
| 39 X 0684 | 15 X 0529 |
| 33 X 0182 | |
| **Y** | |
| 26 Y 0493 | 27 Y 0546 |
| 09 Y 0070 | |
| **Z** | |
| 05 Z 0607 | 13 Z 0118 |
| 13 Z 0916 | 15 Z 0854 |


கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை, - கொழும்பு.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584





இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப பத்திரிகா சமாஜம், குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை)- வெளியிட்ட திகதி 5 ஜூன் 1970.
Thanthi 5, Gunasena Maw atha, Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org